உ
சிவமயம்



நல்லூரை பிறப்பிடமாகவும்
உயரப்புலம் ஆனைக்கோட்டையை
வசிப்பிடமாகவும் கொண்ட

# தையல்நாயகி கதிரவேலு

அவர்களின்

# நினைவு மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



தீயவை புரிந்தா ரேனுங் குமரவேள் திருமுன் உற்றால்
தூயவ ராகி மேலைத் தொல்கதி யடைவ ரென்கை
ஆயவும் வேண்டுங் கொல்லோ அடுசமர் இந்நாட் செய்த
மாயையின் மகனுமன்றோ வரம்பிலா வருள்பெற்றுய்ந்தான்.

நல்லூர்

# தையல்நாயகி கதிரவேலு

அவர்களின்

# நினைவு மலர்

11.07.2004

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம்மலர் உங்களுக்கு

**அன்பைப் பொழிந்து அறிவூட்டி**
**அவனி போற்றும் ஆளாக்கி**
**வளர்த்த அம்மா நினைவாக**
**நல்லூர் முருகன் தாள்களிலே**
**மலரை வைத்து வணங்குகின்றோம்.**

* * * * *

**உருவாய் அருவாய் உளதாய் இலதாய்**
**மருவாய் மலராய் மணியா யொளியாய்க்**
**கருவாய் உயிராய்க் கதியாய் விதியாய்**
**குருவாய் வருவாய் அருள்வாய் குகனே.**

- கந்தரனுபூதி -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

அமரர்

# தையல்நாயகி கதிரவேலு

அவர்கள்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 20 | 11 |
| 02 | 06 |
| 1926 | 2004 |

## திதி வெண்பா

ஆண்டு தாரண வைகாசி ஈர்ப்பான் ஒன்ப
துாண்டு தசமித் திதி மிளிர - ஈண்டு புகழ்
மிக்க தையல்நாயகியும் மேதினியை விட்டிலர்ந்து
சொக்கனடி சார்ந்த தினம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

திருவாக்கும் செய்கருமங் கைகூட்டுஞ் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனைமுகத் தானைக்
காதலால் கூப்புவர்தம் கை.

## தேவாரம்

அந்த ணாளன்உன் அடைக்கலம் புகுத
அவனைக் காப்பது காரண மாக
வந்த காலன்தன் ஆருயி ரதனை
வவ்வினாய்க் குன்றன் வண்மைகண் டடியேன்
எந்தை நீஎனை நமன்தமர் நலியின்
இவன்மற் றென்னடி யானென விலக்கும்
சிந்தையால் வந்துன் திருவடி அடைந்தேன்
செழும்பொ ழில்திருப் புன்கூர் உளானே.

## திருவாசகம்

மெய்தான் அரும்பி விதிர்விதிர்த் துன்விரை
யார் கழற்கென்
கைதான் தலைவைத்துக் கண்ணீர் ததும்பி
வெதும்பி யுள்ளம்
பொய்தான் தவிர்த்துன்னைப் போற்றி சயசய
போற்றி யென்னும்
கைதான் நெகிழ விடேன்உடை யாய்என்னைக்
கண்டு கொள்ளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

ஏக நாயகனை இமையவர்க் கரசை
என்னுயிர்க் கமுதினை எதிரில்
போக நாயகனைப் புயல்வணற் கருளிப்
பொன்னெடுஞ் சிவிகையா லூர்ந்த
மேக நாயகனை மிகுதிரு வீழிமிழலை
விண்ணிழி செழுங் கோயில்
யோக நாயகனை அன்றிமற் றொன்றும்
உண்டென உணர்கிலேன் யானே.

## திருப்பல்லாண்டு

மன்னுலக தில்லை வளர்கநம் பத்தர்கள்
வஞ்சகர் போயகலப்
பொன்னின்செய் மண்டபத் துள்ளே புகுந்து
புவனிஎல் லாம்விளங்க
அன்னநடை மடவாள்உமை கோன்அடி
யோமுக்கு அருள் புரிந்து
பின்னைப் பிறவி அறுக்க நெறிதந்த பித்தற்குப்
பல்லாண்டு கூறுதுமே.

## பெரிய புராணம்

சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்
பவமதனை அறமாற்றும் பாங்கினில் ஓங்கியஞானம்
உவமையிலாக் கலைஞானம் உணர்வரிய மெய்ஞானம்
தவமுதல்வர் சம்பந்தர் தாம் உணர்ந்தார் அந்நிலையில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

உம்பர்தருத் தேனுமணிக் கசிவாகி
ஒண்கடலிற் றேனமுதத் துணர்வூறி
இன்பரசத் தேபருகிப் பலகாலும்
என்றனுயிர்க் காதரவுற் றருள்வாயே
தம்பிதனக் காகவனத் தணைவோனே
தந்தைவலத் தாலருள்கைக் கனியோனே
அம்பர்தமக் கானநிலைப் பொருளோனே
ஐந்து கரத் தானைமுகப் பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க
நான்மறையறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச் செய்த சிவபுராணம்

திருச்சிற்றம்பலம்

தொல்லையினும் பிறவிச் சூழும்தளை நீக்கி
அல்லல் அறுத்தானந்த மாக்கியதே - எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூரெங்கோன்
திருவாசகமென்னும் தேன்.

## சிவபுராணம்

நமச்சிவாய வாழ்க நாதன்றாள் வாழ்க
இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க
கோகழி ஆண்ட குருமனிதன் தாள் வாழ்க
ஆகம மாகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அநேகன் இறைவன் அடி வாழ்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேகம் கெடுத்து ஆண்ட வேந்தன் அடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்கச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவா ரோங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க

ஈசன் அடி போற்றி எந்தை அடி போற்றி
தேசன் அடி போற்றி சிவன்சே வடி போற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடி போற்றி
மாயப்பிறப்பறுக்கும் மன்னன் அடி போற்றி
சீரார் பெருந்துறைநம் தேவன் அடி பேற்றி

ஆராத இன்பம் அருளு மலை போற்றி
சிவன் அவன் என் சிந்தையுள் நின்ற அதனால்
அவனருளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணம் தன்னை
முந்தை வினை முழுதும் ஓய உரைப்பன்யான்

கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கு எட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந் தெல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்மிருகம் ஆகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல் அசுரராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா அ நின்ற இத்தாவர சங்கமத்துள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யே உன் பொன் அடிகள் கண்டு இன்று வீடுற்றேன்
உய்ய என் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாக வேதங்கள்
ஐயா என ஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே

வெய்யாய் தணியாய் இயமானனாம் விமலா
பொய்யாயின எல்லாம் போய் அகலவந்தருளி
மெஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞான மில்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானந்தன்னை அகல்விக்கும் நல்லறிவே

ஆக்கும் அளவு இறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அளிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின் தொழும்பின்
நாற்றத்தி னேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனம் கழிய நின்ற மறையோனே

கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற்போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேன் ஊறிநின்று
பிறந்த பிறப்பு அறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்கள் ஓரைந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் றன்னை

மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறம்தோல் போர்த்தெங்கும் புழுவழுக்க மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப்புலன் ஐந்தும் வஞ்சனையைச் செய்ய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலங்கு மனத்தால் விமலா உனக்கு
கலந்த அன்பாகிக் கசிந்துள்ளுருகும்
நலம்தானிலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள் கழல்கள் காட்டி
நாயிற்கடையாய்க் கிடந்த அடியேற்குத்

தாயிற்சிறந்த தாயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேன் ஆர் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெடப்

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கிஎன் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே

அன்பருக் கன்பனே யாவையுமாய் அல்லையுமாம்
சோதியனே துன் இருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்து என்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெஞ்ஞானத்தால் கொண்டுணர்வார் தங்கருத்தின்

நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வும் இலாப் புண்ணியனே
காக்கும் எங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக்காய் நின்ற
தோற்றச் சுடர் ஒளியாய் சொல்லாத நுண்ணுணர்வாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையுள்
ஊற்றான உண்ணாரமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உள்கிடப்ப
ஆற்றேன் எம் ஐயா அரனேயோ என்றென்று

போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்குவந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப்புலக்குரம்பைக் கட்டு அழிக்க வல்லானே
நள் இருளில் நட்டம் பயின்று ஆடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே

அல்லல் பிறவி அறுப்பானே ஓஎன்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவன் அடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் தையல்நாயகி கதிரவேலு

அவர்களின்

## வாழ்க்கை வரலாறு

முற்காலத்தில் வட இலங்கையின் தலைநகராக விளங்கியதும் வரலாற்றுச் சிறப்பு மிக்கதும் நல்லூர். இந்த நல்லூரில் தான் முதல் தமிழரசன் சங்கிலியனின் இராசதானி இருந்தது. தமிழும் சைவமும் ஒரு கொடியிற் பூத்த இருமலர்களாக இங்கு விளங்குவது மாத்திரமன்றி சைவ அறிஞர்களும் பெரியார்களும் வாழ்ந்த புண்ணிய பூமி இது. "நல்லை நகரில் வாழ்ந்த ஆறுமுக நாவலர் பிறந்திலரேல் சொல்லு தமிழ் எங்கே சுருதி எங்கே" என ஒரு புலவர் பாடியுள்ளார்.

இப்படி பல சிறப்புக்களைக் கொண்ட நல்லூரில் புகழ் பூத்த உயர் குலத்தில் திரு. ஸ்பென்சர் செல்லத்துரைக்கும் மனைவி அன்னப்பிள்ளைக்கும் ஆறாவது பிள்ளையாக 1926ம் ஆண்டு மாசி மாதம் 20ம் திகதி பிறந்தவர் தான் **தையல்நாயகி.** இவர் தனது உடன் பிறப்புக்களாக ஸ்பென்சர் சபாரத்தினம், சின்னம்மா, ஸ்பென்சர் சபாநாயகம், ஸ்பென்சர் சபாலிங்கம், சரஸ்வதி ஆகியோரைக் கொண்டிருந்தார். அமரர் தையல்நாயகி இரண்டு வயது கைக்குழந்தையாக இருந்த பொழுது இவரின் அன்புத் தந்தையார் காலமாகியதைத் தொடர்ந்து தந்தையை இழந்த தையல் நாயகியையும் அவரின் உடன் பிறப்புக்களையும் இவர்களின் சிறிய தந்தையும் முன்னாள் மாவட்ட நீதிபதியுமான (District Judge) ஸ்பென்சர் இராசரத்தினம் அவர்கள் இப் பிள்ளைகளுக்கு கல்வியறிவூட்டி நற்பிரசைகளாக்க வேண்டும் என்ற கரிசனையுடன் தந்தையைப் போல் அக்கறை கொண்டு தனது அரவணைப்பில் பராமரித்து வந்தார்.

அமரர் அவர்கள் தனது ஆரம்பக் கல்வியை நல்லூர் மங்கையர்கரசி வித்தியாசாலையிலும் உயர் கல்வியை ஆங்கில திருக்குடும்ப கன்னியர் பாடசாலையிலும் (English Holy Family Conment Jaffna) வேம்படி மகளிர் கல்லூரியிலும் கல்வி கற்று உயர் சித்தியடைந்தார். இவரின் கல்வி பூர்த்தியடைந்ததும் பெரியோர்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருப்பப்படி அராலி வடக்கைச் சேர்ந்த திரு. கந்தையா பெண் செல்லம்மா தம்பதிகளின் கனிஷ்ட புத்திரரும் பெருந்தோட்ட பகுதியில் உயர் அதிகாரியாக (Tea Faetor Officer) கடைமையாற்றிய கதிரவேலு என்பவரைத் திருமணம் செய்து இலங்கையின் மத்திய பகுதியில் சிறப்பாகவும் மிகவும் மகிழ்சிசியுடனும் வாழ்ந்து வந்தனர்.

**"இயல்பினானில் வாழ்க்கை வாழ்பவனென்பான் முயல்வாருளெல்லாம் தலை"**

செல்வங்களிளெல்லாம் பெரும் செல்வமான பிள்ளைச் செல்வங்கள் மூவரைப் பெற்று மகிழ்ந்தார். குணேந்திரன், ரவீந்திரன், நளினி ஆகிய செல்வங்களை சிறப்பாக வளர்த்து கல்வி அறிவூட்ட வேண்டு மென்ற பெருநோக்கத்தோடு அவர்களை சிறந்த கல்லூரிகளில் சேர்த்து அவர்களுக்கு கல்வியறிவூட்டி நானிலம் போற்ற நல்லவர்களாக ஆக்கினார். இவரின் சிரேட்ட புத்திரன் குணேந்திரன் கொக்குவிலைச் சேர்ந்த கிருஷ்ணபிள்ளை கமலாம்பிகை தம்பதிகளின் புத்திரி கௌரியையும், ரவீந்திரன் இணுவில் கிழக்கை சேர்ந்த இராஜரட்ணம் ஞானப்பூங்கோதை தம்பதிகளின் புத்திரி நந்தினியையும் திருமணம் செய்து ஜேர்மனியிலும் (Germany). நளினி உயரப்புலம் ஆனைக்கோட்டையைச் சேர்ந்த கைலாசபிள்ளை மகேஸ்வரி தம்பதிகளின் புத்திரன் ஜெயபாலன் என்பவரை (Siva Studio Manipay) திருமணம் செய்து நிறைவான வாழ்வு வாழ்கிறார்கள்.

அமரர் தையல்நாயகி தனது கடைசி காலத்தில் உயரப்புலம் ஆனைக்கோட்டையில் தனது செல்வப் புதல்வி நளினி குடும்பத்துடன் மனநிறைவுடன் வாழ்ந்து கொண்டிருந்த பொழுது இவரின் அன்புக் கணவர் 2002ம் ஆண்டு காலமானது இவருக்கு பேரிடியாக அமைந்து விட்டது. அதன் பின்பு சிறிது நோய் வாய்ப்பாட்டிருந்தார். இவர் தனது அன்பு ரேரப்பிள்ளைகளான இந்திரஜித், ஜெனனி, கார்த்திகா, காஞ்சனா, ரிஷிபாலன், சாரங்கன் ஆகியோர் மீது தணியாத பாசம் கொண்டு அவர்களின் முன்னேற்றத்தில் மகிழ்வடைந்து கொண்டிருக்கும் காலத்தில் தனது எழுபத் தெட்டாவது வயதில் 11.06.2004 வெள்ளிக்கிழமை அமைதியாக இவ்வுலகை விட்டு இறைபதம் அடைந்தார்.

* * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடக்குந் தொடர்பும்

## அல்லது

## ஆசௌச விளக்கம்

**அறிமுகம் :**

"துடக்கு என்பது ஒருவர் தொடர்பு காரணமாக ஒருவர்க்கேற்படும் அசுகுசுப்பான அகப்புறச் சூழ்நிலையைக் குறிக்கும்" என்று இலக்கிய கலாநிதி பண்டிதமணி மு.கந்தையா அவர்கள் தாமெழுதிய அபரக்கிரியை விளக்கம் - வினாவிடை என்னும் நூலிற் குறிப்பிட்டுள்ளார்கள். தொடர்புள்ள ஒருவர் இறக்கும்போது அல்லது தொடர்புள்ள ஒருவருக்கு குழந்தை பிறக்கும்போதும் மற்றொருவரது மனத்திலும் உடம்பிலும் ஏற்படும் அழுக்குடனாகியுள்ளோம் என்னும் விகற்ப எண்ணப் பாங்கு அது. சிவனுடனாய கிரியைகளில் தொடர்ந்து செல்லமுடியாது தடைப்படுத்தப்பட்டுள்ளோம் என்பது கருத்து. ஏனைய மகிழ்ச்சியுடன் கூடிய விழாக்களிலும் கலந்துகொள்ள முடியாதபடி எமக்கு தடைநேர்ந்துள்ளது என்று நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். அது தானாகவே உணர்விக்கப்படக்கூடிய வாய்ப்பும் உண்டு. மேற்குலக மோகத்துள் மூழ்கியுள்ள ஒரு சிலர் - விஞ்ஞானத்தையே தெய்வமென்று சொல்ல விரும்பும் ஒரு சிலர் - கிருமிகள் தொற்றுவதைத் தடுப்பதற்காக எடுத்துக் கொள்ளப்பட்ட ஒரு தடை முயற்சியே இது என்று சொல்லுவர். எவர் எதைச் சொன்னாலும் மனத்தையும் தூய்மையற்றதாக்கிப் புறத்தையும் தூய்மையற்றதாக்கி அசுத்தத்தையும் உணர வைப்பது அது என்பதே உண்மை.

ஆசௌசம், ஆசூசம், தொடக்கு, துடக்கு, தீட்டு, சூதகம் என்பன ஒரு பொருளைக் குறிப்பனவாகி நிற்பன. ஆசௌசம் என்ற சொல்லே பேச்சு வழக்கில் மாற்றம் பெற்று ஆசூசம் என்று பயிலத் தொடங்கியிருக்க வேண்டும் என்று சொல்பவர்கள் உண்டு. அவ் வண்ணம் பயின்று வந்த சொல்லே காலப்போக்கில், எங்கள் பன்னிரு திருமுறைகளுட் காலத்தாற் முற்பட்டவற்றொன்று என்று கருதப்படும் திருமந்திரத்துள் இரு திருப்பாடல்களில் இடம்பெற்றுவிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசூசம் ஆசூசம் என்பர் அறிவிலர்
ஆசூச மாமிடம் ஆரும் அறிகிலர்
ஆசூச மாமிடம் ஆரு மறிந்தபின்
ஆசூச மானிடம் ஆசூச மாமே.

திருமந்திரம்: 2551

ஆசூச மில்லை அருநிய மத்தருக்
காசூச மில்லை அரனைஅர்ச் சிப்பவர்க்
காசூச மில்லையாம் அங்கி வளர்ப்போர்க்
கபசூச மில்லை அருமறை ஞானிக்கே.

திருமந்திரம்: 2551

என்று வரும் இப்பாடல்கள் ஆசூசம் என்றால் என்ன என்பதையும், யார் யாருக்கு ஆசூசம் இல்லை என்பதையும் தெளிவுபடுத்துகின்றன. இப்பாடல்களிற் பயன்படுத்தப்படுள்ள ஆசூசம் என்னுஞ் சொல்நிலை சிந்தித்துத் தெளிவு பெறப்பட வேண்டிய தொன்று. தொடக்கு என்ற சொல்லே காலப்போக்கில் துடக்கு என்று வழக்கவும் தொடங்கியிருக்கலாம் என்று சிந்திப்பது பொருத்தமானது. ஆசௌசம் என்னும் வடமொழிச் சொல்லில் சௌசம் என்னும் பகுதிச் சொல் சுத்தம் என்னும் பொருளைத் தருவது. ஆசௌசம் சுத்தமாயிருக்கும் நிலையை இழந்தது என்று கொள்ள வேண்டும். சுத்தத்தை இழந்தது எனவே அசுத்தம். விவேகம் கூர்த்த அறிவு. அவிவேகம் கூர்த்த அறிவை இழந்தது என்று கொள்ள நிற்பது போன்றது ஆசௌசம் என்பதும் எனலாம். ஆசௌசம் தமிழாகும் போது தொடக்கு என்றாயிற்று. தொடுதல் காரணமாகத் தொடருவது என்பது பொருளாக வேண்டும். அதாவது இறப்பினை அடைந்தவரையோ குழந்தையைப் பெற்றவரையோ மனத்தினால் அல்லது உடம்பினால் தீண்டக் கூடியவரைச் சேரக்கூடியது தொடக்கெனப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரணத் தொடக்கு

**தொடக்கின் ஆரம்பம் :**

ஓர் உயிர் தூல உடம்பை விட்டு நீங்கும் நிலைக்குள்ளாகும் வேளையிலிருந்து அபரக்கிரியைக்குரிய போதாகக் கொள்ளப்படும். ஆனால், மரணிப்பதால் ஏற்படும் தொடக்கு அந்த வேளையில் ஆரம்பிப்பதில்லை. உடலை விட்டு உயிர் பிரிந்தபின் பிரேதத்தைச் சேமஞ் செய்து உரியவர்கள் துன்பமேலீட்டால் அழத் தொடங்கும் போது தான் தொடக்கு ஆரம்பிக்கின்றது என்று துணிய வேண்டும். இதற்கான ஆதாரத்தைப் பெரிய புராணம் அப்பூதியடிகள் வரலாற்றில் கண்டு கொள்கிறோம். நாவுக்கரசரை அமுது செய்விக்க வேண்டி எல்லா முயற்சிகளும் நடை பெற்றுக் கொண்டிருந்த வேளை அப்பூதியடிகளின் மூத்த புதல்வன் வாழையிலை வெட்டச் சென்றவன் பாம்பினாற் கடியுண்டான். வாழையிலையைக் கொண்டு வந்து கொடுத்த மைந்தன் மயங்கி விழுந்து இறக்கிறான். விடயத்தை உணர்ந்து கொண்ட பெற்றோர். மைந்தன் இறப்பினாற் கவலை கொள்ளவில்லை. அடியவரை அமுது செய்விப்பதற்கு இடையூறு வரக்கூடாதே என்று நினைத்து மைந்தன் பிரேதத்தை ஒரு பாயிலே சுருட்டி ஒதுக்கமாக வைத்து விட்டுக் கணவனும் மனைவியும் மகிழ்ச்சியோடு உணவு பரிமாறுகின்றனர். இறந்தவரது பிரேதத்தை வீட்டுள்ளே வைத்துக் கொண்டு சிவனடியார் ஒருவருக்கு உணவு பரிமாறுகின்றார்கள். அதுவும் பிராமணராகிய அப்பூதியடிகள் தன் மூத்த புதல்வன் இறந்திருக்க இந்த உணவு வழங்கலைச் செய்கிறார். இந்த நடைமுறைகள் கொண்டு தொடக்கு மற்றையோரை வந்து அணுகக்கூடிய சந்தர்ப்பத்தை யாம் முன்னே காட்டியவாறு சிந்தித்துக் கொள்ள வேண்டும்.

**மரணித்த தினங் கொள்ளல் :**

இரவு பன்னிரண்டு மணியின் பின் ஒருவர் இறந்திருந்தால் அது அடுத்து வரும் நாள் சூரியோதயத்தின் முன்னென உணரப்பட்டால் முந்திய நாள் இறந்ததாகவே கொள்ள வேண்டும். மேற்குலகச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தனைகளுடனாகிய சிலர் இரவு பன்னிரண்டு மணியின் மேல் இறத்தலை மறுநாள் இறந்ததாகக் கொள்ள வேண்டும் என்பர். எங்கள் நாள் மாற்றக் கணிப்புச் சூரிய உதயத்தை மையமாகக் கொண்டது. சூரிய உதயத்திற்கு முன் என்றால் முதல் என்றும் பின் என்றால் மறுதினம் என்றுங் கொள்ள வேண்டும்.

**குழந்தை இறப்பு :**

குழந்தை ஒன்று பிறந்து சனனத் தொடக்கு நீக்கத்தின் பின் ஆறுமாதத்துள் இறந்தால் ஒரு நாள் தொடக்குக் கொள்ள வேண்டும். மயிர் கழித்தலாகிய செளளம் என்னுங் கிரியை நடைபெற வேண்டிய ஒன்பதாம் ஆண்டின் முன் இறந்தால் மூன்று நாட்களும் பதினாறாம் ஆண்டின் முன் இறந்தால் பன்னிரண்டு நாள்களும் அதன் மேலெனின் முழுநாள்களாகிய முப்பது நாள்களும் தொடக்கு காத்தல் பொருத்தம் ஒன்பதாவது ஆண்டு வரையில் வருந் தொடக்கு ஞாதியர்களாய உறவினரையும் அதன் மேல் வருந் தொடக்கு சபிண்டர்களாகிய ஏழு தலைமுறை உறவினர்களையும் சாரும்.

**குருசீடர், ஆசிரியர்மாணாக்கர் தொடக்கு :**

குருவுஞ் சீடருமாகப் பழகியவர்கள், ஆசிரியரும் மாணவருமாகப் பழகியவர்கள் இவர்களுள் யாரொருவர் இறந்தாலும் மற்றவர் மூன்றுநாள் தொடக்குக் காத்தல் தகும். அவர்கள் இருவரும் ஒருவர் மீதொருவர் கொண்ட மன ஈடுபாடு கொண்டே இது கணிக்கப்படும்.

**பதினாறு வயதின் மேலானவர் இறந்தால் :**

இறந்தவர் பெண்ணாக இருந்தால் இறந்தவரது பெற்றோர், திருமணமான சகோதரியர் நீங்கலாக ஏனைய சகோதரர், ஆண் சகோதரரின் மனைவியர், பிள்ளைகள், தந்தையின் ஆண் சகோதரர், அவர் தம் துணைவியர், அவர் ஆண் பிள்ளைகள், மனைவியர், தந்தையது திருமணமாகாத சகோதரியர், தந்தையின் தந்தையின் தாய் தந்தை, அவர் ஆண் சகோதரர்கள், மனைவியர், ஆண்பிள்ளைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றிப்படியாக வரும் ஏழுதலை முறை ஆண்வழி உறவினர் தொடக்குக் காப்பதற்கு உரியர்.

இவர்களது மூன்றாவது தலைமுறை வரையுள்ள ஆண்வழி உறவினர் பூரணமான நிறைநாள் தொடக்கினர். அதற்கு மேல் ஏழாவது தலைமுறை வரையுள்ள ஆண்வழி உறவினர் மூன்று நாள்கள் மட்டும் தொடக்கு காத்தாற் போதுமானது. இறந்தவர் ஆணாயின் இறந்தவரது ஏழாவது தலைமுறை வரையுள்ள ஆண்வழி உறவினர் நிறைநாள் தொடக்குக் காத்தற்குரியவர்.

இறந்த ஆணினுடைய தந்தையின் மாமா, மாமி, பெரியதாய், சிறியதாய், இவர்கள் பிள்ளைகள், பெற்றதாயின் பெரியதாய் சிறியதாய் இவர்கள் பிள்ளைகள் முதலானோரது தொடக்கு நீராடுவதால் நீங்கிவிடும்.

இறந்தவர் திருமணமான பெண்ணாகவிருந்தால் பெண்ணின் தாய் தந்தையர், திருமணமான அவள் மகள், மகளுடைய மகள், சகோதரி, அவள் மகள் என்போருந் தொடக்குடனாவர். மூன்றுநாளில் அவர்கள் தொடக்கு நீக்கம் பெறும்.

**திருமணம் நிச்சயிக்கப்பட்ட பெண் இறத்தல் :**

திருமணமொன்று நிச்சயிக்கப்பட்ட பின் திருமாங்கல்ய தாரணம் நடைபெறுமுன் ஒரு பெண் இறந்தால் பெண்ணின் பெற்றோரும், தந்தையின் ஆண் வழி உறவினர்களும், கணவனென்று நிச்சயிக்கப்பட்டவரின் தாய் தந்தையர், தந்தை மூலமான ஆண் வழி உறவினர்கள் தொடக்கிற்குரியவர். மூன்று தலைமுறையுள்ள இருபகுதியினரும் தொடக்குக் காத்தல் வேண்டும்.

**தூர இடத்திலிருந்து வந்த பிந்திய செய்தியால் :**

தொடக்கு நீங்கிக் கொண்டிருக்கும் வேளை வெளிநாட்டுச் செய்தி ஒன்று குறிப்பிட்டதொரு தொடக்குப்பற்றி அறியத் தந்தால் கழியாதிருக்கும் மிகுதி நாள்களில் தொடக்கை காத்து நீராடி நீக்கிக் கொள்ளலாம்.

* * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபரக்கிரியைகள்

ஒருவர் இறந்த பின்பு அவரது நன்மை கருதி அவரது பிள்ளைகள் முதுலியோரினால் செய்யப்படும் கிரியைகள் அபரக்கிரியைகள் எனப்படும். அபரம் - பிந்திய எனப் பொருள்படும். கிரியைகள் செய்வதனால் இறந்த ஆன்மா பாவங்களின்றும் நீங்கி, சிவத்துவம் அடையும் நம்பிக்கை. தாய் தந்தையருக்குச் செய்ய வேண்டிய கடமைகளை அவர்கள் உயிருடன் இருக்கும் போதும், இல்லாத போதும் பிள்ளைகள் தவறாது செய்தல் வேண்டும். அபரக்கிரியைகளின் பலனைச் சிவாகமங்களும், புராண இதிகாசங்களும் விளக்குகின்றன.

தாய், தந்தையரைப் பேணாது கடவுளை வழிபடல் பயன்தரா என்பது கௌசிகர் வரலாறு மூலம் அறியலாம். அவர்களை வழிபடுவதாகிய ஒரு புண்ணியமே ஒரு பிறப்புக்கு போதியதாகும்.

இல்லறத்தார்க்குரிய முக்கிய ஐவகை கடமைகளில் பிதிர்க்கடன் முக்கியமானதாலேயே திருவள்ளுவர் அதனை தென்புலத்தார் என முதலில் கூறியுள்ளார். பிதிர்க்கடன் செய்தோர் பெரும்பேறுகளும் சித்திகளும் பெறுவர். சிவ அருளுக்கு ஆளாவார். பிதிர்க்கடன் செய்யாதோர் சமய ஆசாரம் தவறியவராவர். பிதிரர் வருந்தின் பெருந்தீமைகள் நேரும்.

## அபரக்கிரியை வகைகள்

இவை தகனக்கிரியை, அந்திசஞ்சயனம், அந்தியேட்டி, ஏகதிட்டம், சபீண்டீகரணம், மாசிகம், சிரார்த்தம் என பல பகுதிகளை உடையன. இவைகள் உத்தரக்கிரியை, சிரார்த்தகிரியை எனவும் அழைக்கப்படும். தீட்சை பெற்றோருக்கு மாத்திரம் சைவக்கிரியைகள் செய்யப்படும். உயர்ந்த நிலையில் உள்ள சிவனடியார்கள் சிவனேயாவார். அவர்களுக்குரிய உத்தரகிரியைகள் வழிபாடாக நடைபெறும். அவர்கள் சிரார்த்தம் குருபூசையாக நட்சத்திரநாளில் நடைபெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரணக்கிரியைகள்

சுத்த சைவர்களுக்கு செய்யும் தகனக்கிரியையில் மூன்று பகுதிகள் உள்ளன. அவையாவன பேரிகையடித்தல், உடற்சுத்தி, ஆன்மசுத்தி, என்பனவாகும்.

## பேரிகையடித்தல்

ஆசாரியார் புண்ணியாகம் செய்து அந்தநீரினால் இடத்தையும், பொருளையும் சுத்தி பண்ணி மேளத்திலே பிரமா, விஷ்ணு, உருத்திரன் முதலிய மூர்த்திகளைப் பூசித்து மேளம் அடிப்பார். மேளம் அடிக்கும் போது சொல்லும் மந்திர வாக்கியத்தின் பொருள் இறந்த ஆன்மா நன்மையடைய வேண்டும் எனவும் பூமியிலும் மறுஉலகங்களிலும் உள்ள யாவரும் வாழவும், அசுரர், கொடியோர் அடங்கவும் சகல உயிரினங்களும் ஐஸ்வரியம் உண்டாகவும் வேண்டும். மிருகம், பறவை முதலிய உயிரினங்களுக்கும் நன்மை உண்டாக வேண்டும் எனவும் உமாதேவியார் கட்டளைப்படி பேரிகை அடிக்கிறேன். சிவபெருமான் இதனை இரட்சிக்க என்பதாகும். (இன்று ஆசாரியார் இதனை அடிப்பதில்லை. இதற்கு அறிகுறியாக மணியை மாத்திரம் அடிக்கிறார்.)

## உடற்சுத்தி

சிவாச்சாரியார் பந்தலின் நடுவில் சிவகும்பமும், உருத்திர கும்பமும் வைத்து அவற்றின் முன் ஓம அக்கினியை வளர்த்து சிவனையும் உருத்திரனையும் வழிபடுவர். எண்ணெய், பஞ்சகவ்வியம், இளநீர், மஞ்சள், நீர், சிவகும்பநீர் ஆகியவைகளை இறந்தவர் உடலை நீராடிச் சுத்தி செய்து புத்தாடை புனைந்து, நீறுசாத்திப் பூச்சூடி பிரணவமான தர்ப்பையில் வைப்பர்.

சிவாச்சாரியார் பஞ்சசுத்திகளையும் சகலிகரணத்தையும் செய்து அக்கினி வளர்த்து அட்டதிக்கு தேவர்களையும் சிவனையும் வழிபட்டு அவர்களின் ஆசீர்வாதத்தையும் பெறுவர். கும்பத்தில் சிவனை உடலின் மீது எழுந்தருளும்படி வேண்டி வழிபாடு செய்வர்.

இருதயத்தில் சிவனை ஆவாகனம் செய்து கொள்வர். பின்னர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசாரியார் இறந்தவரின் நித்திய அனுட்டானக் குற்றங்களை தீர்க்க ஆகுதி செய்து, அழைக்கப்பட்ட ஆன்மாவை தன் இருதயத்திற்கு கொண்டு வந்து, உருத்திரனை தியானித்து பூரணாகதியுடன் உருத்திர மூர்த்தியை அடையும் வழியில் விடுவார்.

## சுண்ணம் இடித்தலும் பந்தம் ஏற்றுதலும்

பாவங்களை நீக்குவதற்காக சுண்ணம் இடிக்கப்படுகின்றது பாவங்கள் அகன்றதும் திருவருள் உண்டாவதற்காக பந்தம் ஏற்றப்படும். இவைகளைத் தொடர்ந்து திருமுறைகள் ஓதப்படும்.

## சுடலை சேர்த்தல்

உடலை சுடலைக்கு எடுத்துச் செல்லும் போது அட்டதிக்கு தேவர்களின் ஆசியைப் பெறுவதற்காக வழியிலே நெற்பொரி தூவப்படும். (சைவாசாரம் உள்ள ஒருவரே இதனைச் செய்யத்தக்கவர் ஆவார்) ஓம அக்கினியில் இருந்து உருத்திரனை ஆவாகித்த சிவாக்கினி கும்பமும் உடன் எடுத்துச் செல்லப்படும். சுடலையில் நான்கு முழ நீளம் இரண்டு முழ அகலமான இடத்தில் மஞ்சள் குங்குமம் இட்டு விறகு அடுக்கப்பட்டிருக்கும் இடம் சிதாத்தானம் என்று பெயர் பெறும். இச் சிதாத்தானத்தில் அடுக்கப்பட்ட விறகினைச் சுற்றி வந்து அதன் மீது உடலை வைத்து தற்புருட மந்திரம் சொல்லி நீரையும், அரிசியையும் இறந்தவர் வாயில் இடுவர்.

## தீயிடல்

கும்பத்துடனும், சிவாக்கினியுடனும் உடலைச் சுற்றிவந்து கும்பநீரை உடலுக்குத் தெளித்து குடத்தை முன்பாக நிலத்தில் போட்டு சிவாக்கினியை விறகின் கண் இட்டு எரியச்செய்வர். கொள்ளிவைத்தவர் நீர்க்கரையில் நீராடி வீடு செல்வர். தீயிடும் பொழுது அக்கினி தேவனை பரிசுத்தமாக இருக்கின்ற உடலில் மந்திரத்தால் உண்டான பூரணாகுதியை ஏற்றுக்கொள்ளும் என நினைத்துக் கொண்டே தீயிட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தி சஞ்சயனம்

அத்தி சஞ்சயனம் என்பது எரிக்கப்பட்ட உடலில் இருந்து எலும்புகளையும் சாம்பலையும் எடுத்து புண்ணிய நீரில் சேர்த்தலாகும். அத்தி - எலும்பு, சஞ்சயனம் - கரைத்தல். கால், தொப்பூள், நெஞ்சு, முகம், தலை ஆகிய இடங்களிலுள்ள எலும்புகளை சாம்பலுடன் எடுத்து பாலுள்ள பாத்திரத்தில் இட்டுக் கொண்டு புண்ணிய நீரில் சேர்த்து வழிபாடு செய்யலாம். அத்தியை புண்ணிய தீர்த்தத்தில் இடுவதனால் ஆன்மா புண்ணிய உலகம் அடையும் என்பது பொருள். சாம்பல் அள்ளுதல் என்று கூறப்படுவது இதுவேயாகும்.

## நக்னதானம்

இது தகனக்கிரியை முடிந்த பின் இறந்தவரின் பசி, தாகம் முதலியவற்றை நீக்கும் பொருட்டு குடும்பத்தாரால் ஆடை, அரிசி முதலியவற்றை தானமாக கொடுத்தல்.

## அந்தியேட்டி

இது ஆசௌசக் கடசியில் செய்யப்படும் யாகம் எனப்பொருள் பொருள்படும். அந்திய - கடைசிநாள், இட்டி - யாகம். இறந்தவரின் ஆத்மசித்திக்காக இது நடைபெறுகிறது. இறந்தவரின் சமய அனுட்டானத்தில் உள்ள குற்றங்கள் இதனால் தீரும். புண்ணிய நீர்க்கரையில் நிகழும் கிரியை இது. இதனால் இதனை நீர்க்கடன் என்றும் கூறுவர்.

* * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றியுடன் நினைக்கின்றோம்

அமரரின் நோயுற்ற இறுதி நிலையில் உதவிய
அன்புள்ளங்கொண்டவர்களுக்கு,

இறுதிக் கிரியைகள் நடைபெறுவதற்கு வேண்டிய
உதவிகளைச் செய்த பெருமனம் படைத்தவர்களுக்கு,

தொலைத் தொடர்புச் சாதனங்கள் மூலம், அஞ்சல் மூலம்,
நேரில் அநுதாபம் தெரிவித்து ஆறுதலளித்தவர்களுக்கு,

அந்தியேட்டி கிரியைகள் நடைபெற உதவியவர்களுக்கு,

அழகுற இம் மலரினை அச்சிட்டுதவிய இணுவில்
Ambal Graphics அச்சுபதிவாளர்களுக்கு,

அமரரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும்,
மதியபோசனத்திலும் கலந்து சிறப்பித்தவர்களுக்கு,

**எங்கள் உளம் நிறைந்த நன்றி**


| | | |
|---|---|---|
| **வைமன் வீதி நல்லூர்.** | **பிள்ளைகள்** | **மருமக்கள்** |
| | **க.குணேந்திரன்** | **கௌரி** |
| **உயரப்புலம் ஆனைக்கோட்டை.** | **க. ரவீந்திரன்** | **நந்தினி** |
| | **ஜெ. நளினி** | **ஜெயபாலன்** |

*Ambal Graphics - Inuvil, Sivahamy Amman Kovilady.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வம்சா**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ...சாவழி

வேலவநாதர் கார்த்திகேசு + தையல்முத்து கதிரவேலு

...ன்னம்மா + ...ந்தையா

செல்லையா + நல்லம்மா

ராஜரெட்ணம் + காந்திமதி

அரியநாயகம் + ...ா வீரசிங்கம் ராசம்மா

தங்கம்மா + வேலுப்பிள்ளை செல்லையா

**அன்னப்பிள்ளை**

வள்ளியம்மா + வைரமுத்து பொன்னையா

...சபாலிங்கம் + ...ம்பிகை

சரஸ்வதி + ஜெகபதி

**தையல்நாயகி**

+

ரவீந்திரன் + நந்தினி

கார்த்திகா

காஞ்சனா

ரிஷிபாலன்

நளினி + ஜெயபாலன்

சாரங்கன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லைக் கீர்த்தனம்



இராகம் : ஹம்ஸாநந்தி தாளம் : ஆதி

### பல்லவி

பித்தன் நுதலிலாறு பிழம்புத் தீயாயுதித்த
சித்தனே ஷண்முகனே சேவடிகள் சரணம்

### அனுபல்லவி

அத்தனே! சரவண அழகுப் பொய்கையதனில்
நித்தம் கார்த்திகைப் பெண்கள் நெஞ்சகம்தான் குளிர

### சரணம்

வண்ணக் குழந்தையாக வந்த குமரேசனே
வடிவேல்தனை யேந்தும் வரதனே முருகனே
அண்ணன் கணபதியின் அருமைச் சகோதரனே
அவனிதனிலே நல்லை அமர்ந்த குருபரனே

- இணுவில் ந. வீரமணி

*Ambal Graphics - Inuvil, Sivahamy Amman Kovilady.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org